| | |
|---|---|
| | **<u>பொள்ளாச்சி நகராட்சி</u>**<br>**<u>30.06.2021 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில்</u>**<br>**<u>நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>**<br>**<u>தீர்மான எண். 2902 முதல் 2942 முடிய</u>** |
| **2902)** | பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி தமிழ் நாளிதழ்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான நகரமன்ற வடுகபாளையம் இலவச வாசக சாலைக்கு 01.04.2021 முதல் 31.03.2022 வரை தினசரி நாளிதழ்கள் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மற்றும் வார, மாத இதழ்கள் மற்றும் பத்திரிக்கைகள் விநியோகம் பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 0328/2018/சி4** |
| **2903)** | **இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள தேர்நிலை மார்கெட் கட்டண கழிப்பிடத்திற்கான குத்தகைக்கு எடுக்கப்பட்ட திரு.S.தேவராஜ் த/பெ.சிவக்குமார் என்பவர் குத்தகை காலம் முடிவுற்றதால் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு விட்டதால் மேற்படியாளர் செலுத்திய வைப்புத் தொகை ரூ.60,000/-யை தனக்கு திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை காலங் கடந்த வைப்பு நிதி கணக்கில் உள்ளது. (வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண்.42). எனவே மேற்படி தொகை ரூ.60,000/-யை திரு.S.தேவராஜ் த/பெ.சிவக்குமார் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>**மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண். பி4/1883/2020** |
| **2904)** | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையாக நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் அலுவலகங்கள் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் புகைமருந்து அடிக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தி பைரீத்திரம் 2% மருந்து தெளிக்க வேண்டியுள்ளது. மேற்படி புகைமருந்து தெளிக்க பயன்படும் இயந்திரங்கள் (Fogging Machine) பழுதடைந்து உள்ளதால் வாகனத்தில் பொருத்தும் புகைமருந்து அடிக்கும் இயந்திரம் (Vehicle Mount Machine) புதியது 1 எண்ணம், மற்றும் புதிய Pulse Fogging Machine 2 எண்ணம் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி புகைமருந்து தெளிக்க பயன்படும் இயந்திரங்கள் (Fogging Machine) கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/–த்திற்கும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.5612/2018/எச்2** |
| **2905)** | **சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு WP NO.12557/2021 ல் திருமதி. சுகுணா என்பவர் 4 ம் பிரதிவாதியாக பொள்ளாச்சி நகராட்சியின் மீது நாச்சிமுத்து பிரசவ விடுதியில் உள்ள இரண்டு சக்கர வாகன நிறுத்தம் மனுதாரரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும்** |

| | |
|---|---|
| | அதற்கான ஆண்டு குத்தகை தொகையினை செலுத்திட பொள்ளாச்சி நகராட்சி கடித ந.க.எண்.497/2020/அ6,நாள்.03.06.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் நகராட்சியின் சார்பாக திரு.ஆனந்த் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். : 2541/2021/அ6 |
| **2906)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான நாச்சிமுத்து பிரசவ விடுதியில் உள்ள இரண்டு சக்கர வாகன நிறுத்தம் (வரி விதிப்பு எண், 076/BD01/00139) திருமதி.சுகுணா என்பவரால் 01.02.2019 முதல் குத்தகைக்கு எடுக்கப்பட்டு இறுதி ஆண்டு குத்தகை தொகை செலுத்திட தெரிவிக்கப்பட்டும் நாளது வரையில் தொகை செலுத்தப்படாததால் 10.06.2021 ல் குத்தகை இனமானது பூட்டி நகராட்சி வசம் பொறுப்பேற்க்கப்பட்டுள்ளதாக சந்தை கண்காணிப்பாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி இக் குத்தகை இனத்தின் உரிமத்தினை 1.07.2021 முதல் ரத்து செய்து கணினியில் கேட்பு நீக்கம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1. குத்தகைதாரால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ,5,73,852/-ஐ அன்னார் செலுத்தியுள்ள வைப்பு தொகை ரூ,6,00,000/-ல் இருந்து ஈடு செய்து மீத வைப்புத்தொகை ரூ,26,148/- பறிமுதல் செய்து நகராட்சி பொது நிதியில் சேர்த்து , பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5035/2020/அ6 |
| **2907)** | நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலையம் மற்றும் கூடுதல் பேருந்து நிலையம் பாலக்காடு மெயின் ரோட்டில் செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையங்களின் ‘ஏ’ நிலை அங்கீகாரம் 16.08.2021 உடன் முடிவடைவதால், அங்கீகாரம் புதுப்பிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் பணிகளை மேற்கொண்டு, புதுப்பிக்க வேண்டியுள்ளது.<br><u>பணிகளின் விபரம்:</u><br>1. பேருந்து நிலையத்தில் உள்ள RCC கட்டிடத்திற்கு வர்ணம் பூசப்பட வேண்டும்.<br>2. பேருந்து நிலையத்தில் புதிதாக பேருந்து வருகை மற்றும் புறப்பாடு அட்டவணை வைத்தல்.<br>3. பயணிகள் காத்திருப்பு அறைகளில் ஆண்/பெண் அறிவிப்பு பலகை வைத்தல், குடிநீர் வசதி செய்தல்.<br>4. பேருந்து நிறுத்தம் இடங்களின் வரிசை எண் இடப்படவேண்டும்.<br>5. பழுதான மின் விளக்குகளை சரி செய்தல்.<br>6. பயணிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்தல் மற்றும் அம்மா பாலூட்டும் அறைகளை பழுது நீக்கி விளக்குகள் பொருத்துதல், குடிநீர் வசதி செய்தல்.<br>7. பேருந்து நிலையத்திலுள்ள தார்சாலை சரிசெய்யப்பட வேண்டும் மற்றும் பேருந்துகள் வெளியே செல்லும் முகப்புகளில் கான்கிரிட் தளம் அமைக்கப்பட வேண்டும்.<br>‘ஏ’ நிலை அங்கீகாரம் பெறும் பொருட்டு பேருந்து நிலையங்களில் மேற்காணும் |

| | |
|---|---|
| | **பணிகளை மேற்கொண்டு புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது.**<br>**மேற்காணும் பணிகளில் மராமத்துப்பணிகள் மேற்கொண்டு புதுப்பிக்க ரூ.22.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.**<br>**ஆனால் தற்போது நகராட்சியின் நிதிநிலையை கருத்தில் கொண்டு, மேற்காணும் பணிகளில் வர்ணம் பூசும் பணி நீங்கலாக, மீதமுள்ள பணிகளை மேற்கொண்டு, அதற்கு தகுந்தாற்போல் ரூ.14.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.**<br>**தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>**1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.** |
| **2908)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 86 பணியாளர்களை (Domestic Breeding Checkers) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு கடந்த 16.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ள திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு 01.09.2020 முதல் ஒப்பந்தம் வழங்கப்பட்டு 28.02.2021 நிறைவடைந்தது. மேலும் தமிழக சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற இருந்ததால் மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 01.03.2021 முதல் 30.06.2021 வரை நான்கு மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து டெங்கு தடுப்பு பணிகள் நடைபெற்று கொண்டு வருகிறது. மேற்காண் பணி நீட்டிப்பு காலம் 30.06.2021 உடன் நிறைவடைய உள்ளது.<br>தற்போது தமிழகத்தில் கொரோனா வைரஸ் காய்ச்சலின் இரண்டாம் அலையினை தடுக்கும் பொருட்டு முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவே இந்நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிப்பு நாளிதழ்களில் வெளியிடவும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் காலம் போதுமானதாக இல்லை என்பதால் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலையில், நகரில் கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை தடுக்கவும் மருந்து தெளித்தல் மற்றும் பொது மகளிடையே விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ளவும் தொடர்ந்து 86 DBC பணியாளர்களின் பணி அத்தியாவசியமாக தேவைப்படுவதால் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது கொசு மற்றும் கொசுப்புழு பணிகள் மேற்கொள்ளும் DCB பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அளித்து வரும் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மேண்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்த பணி காலத்தினை மேலும் இரண்டு மாதங்களுக்கு 01.07.2021 முதல் 31.08.2021 பணி நீட்டிப்பு செய்யவும் பணி நீட்டிப்பு காலத்திற்கு ஆகும் DBC பணியாளர்களின் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது DBC பணியாளர்களின் ஒப்பந்த அடிப்படையில் அறித்து வரும் திருவாளர்கள் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் அவர்களுக்கு பணிக்கால நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2476/2020/எச்3** |
| **2909)** | **நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய கூடுதல் பேருந்து நிலைய கடை எண். 19 மற்றும் 20 ஆகிய கடைகள் மின் இணைப்பு இன்றி உள்ளது. தற்போது இக்கடைகள் ஏலதாரரின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டியுள்ளதால், தமிழ்நாடு மின் வாரியத்தில் விண்ணப்பித்து ஒரு முனை மின் இணைப்புகள் பெற்றுக்கொள்ளவும் இதற்காகும் கட்டணத்** |

| | |
|---|---|
| | **தொகைகளை செலுத்தும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2. **பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண் 1131/2020/அ6** |
| **2910)** | **பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலையம் கடை எண் 23 மின் இணைப்பு இன்றி உள்ளது. தற்போது இக்கடை ஏலதாரரின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டியுள்ளதால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் ஆணையாளர் பெயரில் விண்ணப்பித்து ஒருமுனை மின் இணைப்பு பெறவும், இதற்கான கட்டண தொகைகளை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>அலுவலகக்குறிப்பு:<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2. **பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று** தொகை செலுத்தியமைக்கும் **மன்றம் அனுமதிக்கலாம்.** |
| **2911)** | **பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் பிரிவில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் வாகன எண். TN 41 3444 தகுதி சான்றிதழ் வட்டார போக்குவரத்து துறையில் பெற வேண்டியுள்ளது. இதற்கான பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>அலுவலகக்குறிப்பு:<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2. **வாகன பயன்பாட்டின் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண். 2439/2021/இ2** |
| **2912)** | **பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான உடுமலை சாலை பகுதியில் உள்ள நகராட்சி பழைய பெண்கள் மேல் நிலைப்பள்ளி கட்டிடம் (வரி விதிப்பு எண்.076/13006) திரு.திருமூர்த்தி என்பவராலும் அக்கட்டிடத்தின் ஒரு பகுதி (வரி விதிப்பு எண்.076/13007) திருமதி.விஜயாபிரபா என்பவராலும் குத்தகைக்கு எடுக்கப்பட்டு வாடகை தொகை செலுத்திட பல அறிவிப்பு கடிதம் வழங்கியும் நாளது வரையில் வாடகை தொகை செலுத்தப்படாததால் இரண்டு கட்டிடங்களும் 01.06.2021 முதல் நகராட்சி வசம் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இக்கட்டிடங்களின் குத்தகை உரிமத்தினை 01.06.2021 முதல் ரத்து செய்து கேட்பில் இருந்து நீக்கம் செய்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.**<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண். 2372/2021/அ6** |
| **2913)** | பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி மற்றும் அரசு கட்டிடங்களில் கழிவு நீர் தொட்டி சுத்தம் செய்யும் பொருட்டு 17.06.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்த புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றனர்.<br>**<u>ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-</u>** |

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை (நடை ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | திரு.மனோகரன், தண்ணாசியப்பன் கோவில் வீதி, பொள்ளாச்சி. | ரூ. 1,400/- |
| 2 | திரு.தங்கராஜ், நந்தனார் காலனி, பொள்ளாச்சி | ரூ. 1,500/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.மனோகரன், தண்ணாசியப்பன் கோவில் வீதி, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்- 4604/2019/எச்2**

**2914)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரம் செய்து அகற்றப்படும் பணிகளுக்கு வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் பற்றாக்குறை உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு கடந்த 05.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு திருவாளர் சதர்ன்சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு 05.01.2021 முதல் ஒப்பந்தம் வழங்கப்பட்டு3 0.06.2021 உடன் நிறைவடைய உள்ளது.

தற்போது தமிழகத்தில் கொரோனா வைரஸ் காய்ச்சலின் இரண்டாம் அலையினை தடுக்கும் பொருட்டு முழு ஊரடங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே இந்நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழ்களில் வெளியிடவும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும்காலம் போதுமானதாக இல்லை என்பதால் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலையில் பொதுசுகாதாரபிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரம் செய்து அகற்றப்படும் பணிகளுக்கு வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் பற்றாக்குறை உள்ளதால் தற்காலிக ஓட்டுநர்களின் பணி அத்தியாவசியமாக தேவைப்படுவதால் பொதுசுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது வாகனங்களை இயக்க தற்காலிக ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அளித்து வரும் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ் மெண்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்த பணிகாலத்தினை மேலும் **இரண்டு** மாதங்களுக்கு 01.07.2021 முதல் 31.08.2021 வரை பணிநீட்டிப்பு செய்யவும் பணிநீட்டிப்பு காலத்திற்கு ஆகும் தற்காலிக ஓட்டுநர்களின் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி முன் அறுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம்அனுமதிவழங்கலாம்.
2. பொதுசுகாதாரத்தின்அவசரஅவசியம்கருதி முன் அறுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தற்போது தற்காலிக ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அளித்து வரும் திருவாளர்கள். சதர்ன்சாலிட்வேஸ்ட்

| | |
|---|---|
| | மேனேஜ்மென்ட் சர்வீஸ் அவர்களுக்கு பணிக்கால நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்- 567/2017/எச்2** |
| **2915)** | நகராட்சிக்குச் சொந்தமான காந்தி வாரச் சந்தை வளாகத்தை ஒட்டி காலியிடம் உள்ளது. காலி இடமாக உள்ளதால், தேவையற்ற கழிவுகள் கொட்டப்படும் இடமாகவும் மற்றும் இரவு நேரங்களில் சமூக விரோதிகள் தங்கும் கூடாரமாகவும் இவ்விடம் மாறியுள்ளது. மேலும், அந்நியர்கள் வாகனங்களை நிறுத்துமிடமாகவும் உள்ளது.<br>மேற்காணும் காரணங்களைத் தவிர்க்கும் பொருட்டு, கொட்டப்பட்ட மண் மேடுகளை அகற்றியும், அந்நியர்கள் உள்ளே புகாவண்ணம் இடத்தினைச் சுற்றி கம்பிவேலி அமைத்தும் பாதுகாப்பு செய்ய வேண்டியுள்ளது. மேலும், நகராட்சி முக்கிய சாலைகளின் இருபுறத்திலும் ஏனைய பணிகளுக்காக தோண்டப்பட்டுள்ள மண் குவியல்களை அகற்ற வேண்டியுள்ளது.<br>எனவே, மேற்காணும் இடத்தில் கொட்டப்பட்டுள்ள மண்மேடுகள் மற்றும் கழிவுகளை அகற்றவும், இடத்தினைச் சுற்றிலும் கம்பிவேலி அமைக்கவும் ரூ.2.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி, தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2916)** | **பொள்ளாச்சி நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பயன்பாட்டிற்கான வாகனம் எண். TN 41 E 0192 இயங்குவதற்கான தகுதி சான்றிதழ் வட்டார போக்குவரத்து துறையில் பெற வேண்டியுள்ளது. இதற்கான பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண். 2522/2021/இ2** |
| **2917)** | **பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் பல்வேறு பிரிவுகளில் இயங்கி வரும் கணினியுடன் இணைந்த லேசர் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர் கேர்ட்ரிட்ஜ்களை Recondition and Refilling செய்தல் பணிக்கு ரூ.5.60** |

இலட்சம் மதிப்பீட்டிற்கு 26.05.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/s.Syscon Systems, Coimbatore | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.43% குறைவு. |
| 2. | M/s.Sagar Electronics, Pollachi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.19% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.43% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண்.2847 நாள்.26.02.2021–ல் ரூ.5.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.43% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 0931/2021/இ1

2918) பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சி அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் CCTV கேமரா மற்றும் அதனுடன் இணைந்த இதர உபகரணங்களுக்கான ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டிற்கு 26.05.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/s.Syscon Systems, Coimbatore | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.19% குறைவு. |
| 2. | M/s.Sagar Electronics, Pollachi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.89% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.19% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண்.2848 நாள்.26.02.2021–ல் ரூ.3.25 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.19% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின்

| | |
|---|---|
| | ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 0947/2020/இ1 |
| 2919) | திருவாளர்கள்.எம்.எஸ்.என்டர்பிரைசஸ் சென்னை என்கின்ற ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 2013-2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டு முன்வைப்பு தொகை ரூ.24,000/-னை செலுத்தியுள்ளார். ஒப்பந்தபணி கிடைக்காத காரணத்தினால் முன் வைப்புத் தொகையினை திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை ரூ.24,000/-னை காலம் கடந்த வைப்பு தொகை கணக்கில் உள்ளது. (வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண்.53) எனவே, மேற்கண்ட ஒப்பந்ததாரர்க்கு மேற்படி தொகை ரூ.24,000/- ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். பி4/1252/2021 |
| 2920) | திருவாளர்கள்.ராணி பவர் கன்ட்ரோல்ஸ் சென்னை என்கின்ற ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 2013-2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டு முன்வைப்பு தொகை ரூ.24,000/-னை செலுத்தியுள்ளார். ஒப்பந்தபணி கிடைக்காத காரணத்தினால் முன் வைப்புத் தொகையினை திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை ரூ.24,000/-னை காலம் கடந்த வைப்பு தொகை கணக்கில் உள்ளது. (வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண்.53) எனவே, மேற்கண்ட ஒப்பந்ததாரர்க்கு மேற்படி தொகை ரூ.24,000/- ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். பி4/1253/2021 |
| 2921) | சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு WP எண். 12000/2014 ல் திரு.முத்துச்சாமி என்பவரால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை 1 ம் பிரதிவாதியாகவும் ஆணையர், பொள்ளாச்சி நகராட்சியை 2 ம் பிரதிவாதியாகவும் சேர்த்து காந்தி வாரச்சந்தை தினசரி காய்கறி வியாபார சந்தையில் 1 முதல் 147 வரையுள்ள கடைகளில் வியாபாரம் செய்வேரிடம் நாள் ஒன்றுக்கு ரு,20/- வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிம இனத்தின் 95 கடைகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை தவிர்த்து 52 கடைகளுக்கு தனித்தனி கடைகளாக ஏலம் விட நகரமன்ற தீர்மானம் எண்.305 நாள்,3.03.2014ல் தீர்மானிக்கப்பட்டதை எதிர்த்து மனுதாரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கானது திரு.சக்திவேல் வழக்கறிஞரிடம் வழங்கப்பட்டு 6 ஆண்டுக்களுக்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் இன்றி உள்ளதால் இவ்வழக்கினை திரு.ஆனந்த் வழக்கறிஞர் ஏலம் நடத்திடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம். |
| 2922) | சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு WP எண்.4138/2014ல் திரு.S.செல்வராஐ என்பவர் ஆணையர், பொள்ளாச்சி நகராட்சியை பிரதிவாதியாக சேர்த்து அண்ணா மத்திய கூடுதல் |

| | |
|---|---|
| | பேருந்து நிலையம் பெருமாள் செட்டி வீதி பகுதியில் உள்ள 24 கடைகளுக்கான ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை அதிகளவில் பிரசுரம் இல்லாத தீக் கதிர் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளதை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கானது திரு.சஞுசை காந்தி வழக்கறிஞர் ſலம் நடத்தப்பட்டு 19.04.2021 ல் வழக்கு தள்ளுபடி செய்து நீதிமன்ற உத்தரவ வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வழக்கு கட்டணத் தொகை ரு,9500/- வழங்கிட கோரி கேட்பு வழங்கியுள்ளதன்படி வழக்கு கட்டணத் தொகை வழங்கிட மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். : 8434/2011/அ6 |
| **2923)** | நகராட்சிக்கு சொந்தமான காந்தி வாரச்சந்தையில் உள்ள 1 முதல் 12 பிரிவுகளில் உள்ள நகர் மன்ற கடைகள் மற்றும் காலியிடங்களில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் அக்டோபர் 2020 உடன் முடிக்கப்பட்டுள்ளதை அக்டோபர் 2021 வரை நீட்டிப்பு செய்து வழங்க கோரி குத்தகைத்தாரர் திரு.அக்பர் அலி என்பவரின் விண்ணப்பத்தில் கேட்டுள்ளார்.<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.: 181 நாள் 19.04.2008ன் படி மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி மூன்றாண்டுகளுக்கு ஓப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.அக்பர் அலி என்பவரின் ஆண்டு குத்தகை தொகை ரு,20,75,999/-நகர் மன்ற தீர்மானம் எண்: 1131 நாள். 30.08.2018 ல் ஏற்கப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.: 6967/2017/அ6 நாள், 11.10.2018 ல் குத்தகை உரிமம் 15.10.2018 முதல் 31.03.2021 வரையிலான காலத்திற்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி ஒராண்டு முடிவுற்றவுடன் குத்தகை தொகையில் 5% உயர்வு மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கப்படும் என்ற அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நிதியாண்டினை கணக்கில் கொண்டு அக்டோபர் 2021 ல் முடிவுறும் மூன்றாண்டுக் காலத்தினை 31.03.2021 வரை என தெரிவித்து குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது.<br>இக்குத்தகை இனத்தினை 01.04.2021 முதல் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர நகர் மன்ற தீர்மானம் எண்,2607 நாள் 30.12.2020 ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்5304/2021/ஆர்2 நாள் 16.03.2021 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 06.04.2021 ல் நடைபெறுவதாக அறிவக்கப்பட்டுள்ள நிலையில் மாநகராட்சி/ நகராட்சிகளில் பொது/ ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் தேர்தல் நடத்தை விதிகள் முடிவுறும் வரை நிறுத்தி வைக்கவும் அவ்வினங்கனை தற்போது ஏரம் எடுத்து நடத்தி வரும் குத்தகைதாரர்களே தொடர்ந்து நடத்தவும் அவர்களிடமிருந்து ஏற்கனவே வசூலித்து வரும் தொகையினை வசூலிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து 01.04,2021 முதல் மூன்று மாதத்திற்கான குத்தகை தொகை வசூலிக்கப்பட்டு 30,06,2021 வரை உரிமம் வழங்கப்பட்டுள்ளது,<br>இக்குத்தகை இனத்திற்கு 31.12.2020, 13.01.2021, 09.02.2021 மற்றும் 22.06.2020 ஆகிய |

நாட்களில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை.

இக்குத்தகை இனத்திற்கு மாதம் ரூ.1,90,731/-வீதம் வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது, கோவிட் /19 நோய் தொற்று காரணமாக சந்தையானது செயல்படாமல் இருந்து வருகிறது. இந்நிலையில் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளும் பட்சம் நகராட்சி வருவாய் இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளதால் குத்தகைதாரர் திரு.அக்பர்அலி என்பவர் கேட்டுள்ளதன்படி அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ள குத்தகை உரிமம் காலமான 15.10.2018 முதல் 31.03.2021 வரை வழங்கப்பட்டுள்ளதில் மூன்றாண்டு காலம் அகடோபர் 2021 தான் முடிவுறுவதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு அன்னார் ஏற்கனவே செலுத்தி வரும் இறுதி ஆண்டின் 5% குத்தகை உயர்வு தொகை ரூ.1,90,731/- வீதம் மாதத்திற்கு வசூல செய்து அக்டோபர் 2021 வரை உரிம்ம காலத்தினை நீட்டிப்பு வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு மற்றும் குத்தகைதாரர் திரு.அக்பர் அலி என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 5035/2020/அ6

**2924)** நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு 22.06.2021 ல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது,

| வ. எண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் விபரம் | |
|---|---|---|---|
| | | பெயர் /முகவரி | மாதவாடகை |
| 1. | அண்ணா மத்திய பேருந்து நிலையம் கடைஎண், 18 | திருமதி,M.பௌசியா<br>w/o.முஹம்மது அலி<br>11/2 நேரு வீதி<br>அழகப்பாகாலனி,<br>சூளேஸ்வரன்பட்டி பொள்ளாச்சி | ரூ.13,700/. |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. அண்ணா மத்திய பேருந்து நிலையம் கடை எண், 18 அனது 2017 ம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகளாக காலியாக உள்ளது, இக்கடைக்கு கடந்தாண்டு வாடகை தொகை ரூ.14,421/- ஆகும். இக் கடையானது சுமார் 29 முறைக்கு மேல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை என்பதால் தொடர் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு தற்போது வரப்பெற்றுள்ள திருமதி,M.பௌசியா என்பவரின் மாத வாடகை தொகை ரூ.13,700/- க்கான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் எற்கலாம்.

ந.க.எண்.1131/2020/அ6

**2925)** நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பலன் தரும் மரங்களில் மகசூல் மட்டும் அனுபவித்துக் கொள்ளும் உரிம்ம 01,07,2021 முதல் 30,06,2022 காலத்திற்கு மட்டும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இனங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது,

| வ.எண் | இனத்தின் விபரம் | தற்போது வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியின் குத்தகைத் தொகை | | கடந்த ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| | | திரு.சண்முகசுந்தரம் 2/220A,புதுகாலனி üமீன்முத்துர் பொள்ளாச்சி | திரு.ராஜசேகர் s/o.அண்ணாமலை, 12,ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி | |
| 1, | காந்தி வாரச் சந்தையில் உள்ள மரங்கள் (புளியமரம்) | 27,405 | 10000 | 26100 |
| 2 | பல்லடம் ரோட்டில் உள்ள மரங்கள் (புளியமரம். தென்னை மரம்) | 7300 | 3000 | 6950 |
| 3 | கிறிஸ்துவ மயானத்தில் உள்ள மரங்கள் (புளியமரம்) | 16000 | 5000 | 15800 |
| 4 | நேதாஜீ ரோட்டில் உள்ள மரங்கள் (புளியமரம்) | 15600 | 5000 | 14850 |
| 7 | வடுகபாளையம் ரோட்டில் உள்ள மரங்கள் (புளியமரம்) | 13450 | 4000 | 12800 |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. திரு.சண்முகசுந்தரம் என்பவர் கடந்தாண்டு குத்தகை தொகையினை விட கூடுதலாகவும், திரு. ராஜசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையினை விட கூடுதலாகவும் உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளதை மன்றம் எற்கலாம்.

ந.க.எண். 1836/2021/அ6

**2926)** நகராட்சிக்கு சொந்தமான காந்தி மர்ர்க்கெட் பகுதியில் உள்ள நிரந்தரமற்ற மேல்கூரை கொண்ட வெங்காய கடை எண், 40 மற்றும் 52 க்கு 22,06,2021 ல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது,

| வ.எண். | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விபரம் | |
|---|---|---|---|
| | | பெயர்/முகவரி | தொகை ரூ |
| 1 | காந்தி மார்க்கெட் நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட வெங்காய | திரு,சூரியபிரகாஸ 33 ஜெய் சக்தி நகர் | ரூ.7901 |

| | | | |
|---|---|---|---|
| | கடை எண்,40 | பொள்ளாச்சி | |
| 2 | காந்தி மார்க்கெட் நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட வெங்காய கடை எண்,52 | திரு,ராஜகோபால் 101 நகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி பொள்ளாச்சி | ரூ.5500 |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

<u>அலுவலகக் குறிப்பு</u>

அ) காந்தி மார்க்கெட் நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட வெங்காய கடை எண்,40 மூன்றாண்டு குத்தகை காலம் 31,03,2021 ல் முடிவுற்றுள்ளது, கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.6854/-ல் 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகை ரூ.7901/-க்கு கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ஆ) காந்தி மார்க்கெட் நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட வெங்காய கடை எண்.52 ல் 900 சதுரடி பரப்பளவு உள்ள கடைக்கு சதுரடிக்கு ï.6 வீதம் மாத வாடகை தொகை ரூ.5400 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை விட கூடுதலாக திரு,ராஜகோபால் என்பவர் கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5500/-ஐ மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 2414/2021/அ6

**2927)** பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் தற்போது அதிக அளவில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு வருகிறது கடந்த ஆண்டு மார்ச் 2020 முதல் பிப்ரவரி 2021 வரை பொள்ளாச்சி நகரில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 376 இறப்பு 10 நபர்கள் ஆகும். ஆனால் தற்போது கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி

| வ.எண் | மாதம் | கோவிட்-19 தொற்று பாதிக்கப்பட்டவர்கள் | கோவிட்-19 இறப்பு |
|---|---|---|---|
| 1 | மார்ச்-2021 | 47 | 2 |
| 2 | ஏப்ரல்-2021 | 424 | 14 |
| 3 | மே-2021 | 1061 | 5 |
| மொத்தம் | | 1532 | 21 |

கோவிட்-19 பாதிப்பு நடப்பாண்டில் அதிகம் பொள்ளாச்சி நகர்பகுதிகளில் உள்ளது. தற்போது கோவை மாவட்டத்தில் தொடர்ந்து கோவிட்-19 வைரஸ் பரவுதல் அதிகம் இருப்பதாலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வுக்கூட்டங்களில் நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் தினசரி ILI எனப்படும் சளி, காய்ச்சல், உடல்சோர்வு, உடல்வலி, தலைவலி போன்ற அறிகுறிகளுடன் உள்ளவர்களை உடனுக்குடன் கண்டறிந்து RTPCR TEST எடுக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் நகராட்சிகளின் மண்டல இயக்குனர் அவர்களின் நேரடி ஆய்வின் போதும் இப்பணியினை உடன் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள்.

நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்கள் தமது ந.க.எண்.5437/2021/J1 எண்ணிட்ட நாள்.23.05.2021 சுற்றறிக்கையில் தினசரி 100 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் நியமித்து FEVER ACTIVE SURVILENCE WORKS மேற்கொள்ளவும் அதற்கு தற்போது உள்ள பணியாளர்களுடன் கூடுதலாக பணியாளர்கள் காய்ச்சல் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 (PUBLIC HEALTH ACT 1939) பிரிவு 53-ன் படியும், பொது சுகாதார நலன் கருதியும் நோய் பரவல் வேகத்தினை கட்டுப்படுத்திடவும் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள கூடுதலாக 100 தற்காலிக பணியாளர்கள்

| | |
|---|---|
| | **தேவைப்படுகிறார்கள்.**<br>**ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் கோவை மாவட்டம் அவர்கள் நிர்ணயித்துள்ள DAILY WAGES MAZDOOR தினக்கூலி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.400/- வீதம் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ரூ.400/- [8 மணி நேர பணி] தினக்கூலி விகிதத்தில் 30 பணி நாட்களுக்கு 100/- தற்காலிக காய்ச்சல் கணக்கெடுப்பு பணியாளர்கள் DAILY WAGES MAZDOORS ஏற்கனவே DBC பணியாளர்கள் இந்நகராட்சிக்கு சப்ளை செய்ய ஒப்பந்தம் மேற்கொண்டு பணியாளர்கள் அளித்து வரும் ஒப்பந்த நிறுவனமான திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனம் மூலம் கூடுதலாக 100 நபர்கள் 30 பணி நாட்களுக்கு சப்ளை செய்ய கோரவும். பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும் கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு முக்கியத்துவம் கருதியும் உடனடியாக நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**<br>**ந.க.எண். 2476/ 2021 / எச்3** |
| **2928)** | இந்நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்காக 2021–2022ம் ஆண்டிற்கு எழுதுபொருட்கள், படிவங்கள், ரசீதுகள், பதிவேடுகள், கணினி ரசீதுகள், வரிவசூல் டோக்கன்கள் மற்றும் டோனர்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு உத்தேச வெலவினம் ரூ.50,00,000/–க்கு (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. (நகரமன்ற தீர்மான எண்.2985, நாள் 31.05.2021)<br>மேற்கண்டவாறு எழுதுபொருட்கள், படிவங்கள், ரசீதுகள், பதிவேடுகள், கணினி ரசீதுகள், வரிவசூல் டோக்கன்கள் மற்றும் டோனர்கள் ஆகியவற்றை பெறுவதற்கு கூட்டுறவு அச்சகங்களிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>1. Napco Print சிறு அச்சக சேவை தொழில் கூட்டுறவு சங்கம்<br>2. கோவை மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம்<br>3. ஈரோடு மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம்<br><br>வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மற்ற இரண்டு கூட்டுறவு நிறுவனங்களை விட வ.எண்.1ல் கண்டுள்ள Napco Print சிறு அச்சக சேவை தொழில் கூட்டுறவு சங்கம், வேலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் அனைத்து இனங்களுக்கும் குறைவாக உள்ளது. எனவே குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள நிறுவனமான Napco Print சிறு அச்சக சேவை தொழில் கூட்டுறவு சங்கம், வேலூர் நிறுவனத்திடமிருந்து தேவைக்கேற்ப வாங்கிக் கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1552/2018/டி1** |

| | |
|---|---|
| 2929) | இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள ரயில் நிலைய கடை எண்.6ல் குத்தகைக்கு எடுக்கப்பட்ட திருமதி.டி.வாசுகி என்பவர் குத்தகை காலம் முடிவுற்றதால் மேற்கண்ட கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு விட்டதால் மேற்படியாளர் செலுத்திய வைப்புத் தொகை ரூ.89,788/—யை தனக்கு திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்பு நிதி கணக்கில் உள்ளது. (வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண்.46) எனவே மேற்படி தொகை ரூ.89,788/—ல் ரூ.6736/—ஐ தணிக்கை மற்றும் மின் கட்டணத்திற்காக பிடித்தம் செய்து மீதித் தொகை ரூ.83,052/—னை திருமதி.டி.வாசுகி என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 2355/2021/பி4** |
| 2930) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான பொறியர் பிரிவில் இயங்கும் வாகன எண்: TN 41 3444 வாகனத்தின் தகுதிசான்றிதழ் புதுப்பித்தல் பணி மற்றும் பழுது சரிசெய்யும் பணி 28.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br>1 — M/S: JD&CO, பொள்ளாச்சி — ரூ.1,82,310 /- (வரிகள் உட்பட)<br>2 — குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், பொள்ளாச்சி. — ரூ.1,94,110/- (வரிகள் உட்பட)<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/S:JD&CO, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. இப்பணிக்கு ஆகும் செலவினம் ரூ.2,00,000/- க்க நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S: JD&CO, பொள்ளாச்சி அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி, நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| 2931) | நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.22, 23 மற்றும் 26 ஆகிய கடைகளின் ரோலிங் சட்டர்கள் முழுமையாக பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளது. இக்கடைகளின் பழுதடைந்த ரோலிங் சட்டர்களை அகற்றிவிட்டு புதிதாக பொருத்த வேண்டியுள்ளது. இப்பணியினை செய்து முடிக்க ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

**2932)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 HP மின் மோட்டார் பம்பின் Unit-I-ல் பழுதடைந்துள்ள உதிரிபாகங்களை புதுப்பித்து பொருத்துதல் பணிக்கு ரூ0.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 26.05.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/s.B&G Construction, Mettur. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவு. |
| 2. | Thiru.sree Power Engineers, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.20% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.B&G Construction, Mettur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.13% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.B&G Construction, Mettur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 0421/2021/இ1**

**2933)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையம் மற்றும் நீர்த்தேக்க தொட்டிகளில் சேகரம் செய்யப்படும் குடிநீரில் கிருமி நாசினியாக திரவ குளோரின் வாயு, Hypo Chlorine Liquid மற்றும் பிளீச்சிங் பவுடர் ஒரு வருட காலத்திற்கு தேவையான அளவிற்கு விநியோகம் செய்தல் பணிக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 16.06.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sri Krishna Chemicals, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.82% குறைவு. |
| 2. | Thiru.Garuda Utility Solution, Thanjavur. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.34% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.82% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Sri Krishna Chemicals, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.82% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Sri Krishna Chemicals, Coimbatore

<table>
<tr><td></td><td>அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2158/2021/இ1</td></tr>
<tr><td>2934)</td><td>பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரானா வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்படாமல் இருக்க நகராட்சியில் இருப்புலுள்ள பொருட்களை (GI Sheet மற்றும் சவுக்கு பூட்டுகள்) கொண்டு தடுப்புகள் (Containment Zone) அமைத்தல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15-ன் கீழ் பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திருவாளர்கள்:<br>கே.ஆர்.காளிதாஸ்அன் கோ,<br>5, சக்தி கார்டன்,<br>பாலக்காடு ரோடு,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலையை விட 0.83% குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.G.விக்னேஷ்,<br>12/28, வேட்டைக்காரன் புதூர்,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலையை விட 4.17% அதிகம்.</td></tr>
<tr><td>3</td><td>திரு. சி.ராமகிருஷ்ணன்,<br>29/30, ஜெய பிரகாஷ் வீதி,<br>கோட்டூர் ரோடு,<br>பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலையை விட 10.83% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மற்றதை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலையை விட 0.83% குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ் அன் கோ அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.2427/2021/இ1</td></tr>
<tr><td>2935)</td><td>பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரானா COVID-19 வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை (Containment Zone) பிரித்து தடுப்புகளை அமைத்தல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்</td></tr>
</table>

செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15-ன் கீழ் பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ. எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ்அன் கோ,<br>5, சக்தி கார்டன்,<br>பாலக்காடு ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 0.58% குறைவு. |
| 2 | திரு.G.விக்னேஷ்,<br>12/28, வேட்டைக்காரன் புதூர்,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 1.05% அதிகம். |
| 3 | திரு. சி.ராமகிருஷ்ணன்,<br>29/30, ஜெய பிரகாஷ் வீதி,<br>கோட்டூர் ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 3.02% அதிகம். |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மற்றதை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலையை விட 0.58% குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ் அன் கோ அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 - பிரிவு 15 ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண். 2428/2021/இ1

**2936)** பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான குமரன் நகர் நகராட்சி துவக்கப்பள்ளியில் பழுதடைந்த ஜன்னல், கதவு, கழிப்பறை வசதி மற்றும் தண்ணீர் வசதி ஆகிய பணிகளை நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021-யை யொட்டி சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்காணும் பள்ளியில் உள்ள வகுப்பறைகள் வாக்குச்சாவடி மையங்களாக செயல்படுவதை யொட்டி, இப்பணிகளை மேற்கொள்ளுவது அவசியமாகிறது.

இப்பணிகளை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.0.30 இலட்சம் ஆகும். இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை நகராட்சிகளின் சட்டம் 1920 விதி 15-ன் கீழ் செய்வதற்கும், செலவினத்தை கல்விநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.C.ராமகிருஷ்ணன், மூலமாக மதிப்பீட்டு விலைக்கே செய்து முடிக்க பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**2937)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழியாற்றிலிருந்து எடுக்கப்படும் ஆற்று நீரை சுத்திகரிப்பு செய்வதில், நீரில் உள்ள சேறு மற்றும் திடப்பொருட்களை பிரித்தெடுக்க Aluminino Sulphat (Alum) பயன்படுத்தப்படுகிறது. மேலும் மழை காலங்களிலும், ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களிலும் ஆற்று நீர் சேறு கலந்து வரும் போது சுத்திகரிப்பிற்கு ஏற்ப Alum அதிகமாக கலந்து சுத்திகரிக்க வேண்டியுள்ளது. வரும் வடகிழக்கு பருவமழை காலத்திற்கு முன்னெச்சரிக்கையாக, Alum- தினை கொள்முதல் செய்து இரும்பு வைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்காண் Alum-தினை ஒருவருட கால உபயோகத்திற்கு தேவையான அளவினை (60MT) வாங்கவும், இதற்காகும் ரூ.9.00 இலட்ச செலவினத்திற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப் பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனமதிக்கலாம்.

**2938)** நகராட்சிக்கு சொந்தமான காந்தி வாரச்சந்தையில் உள்ள 1 முதல் 12 பிரிவுகளில் உள்ள நகர் மன்ற கடைகளிலும் மற்றும் காலியிடங்களிலும் கடை வைத்து வியாபாரம் செய்யும் வணிகர்களிடமிருந்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை இனத்தில் இருந்து நகர் மன்ற தீர்மானம் எண்.649 நாள் 19.12.2019-ல் வெங்காய கடைப் பகுதியை நீக்கம் செய்து நிரந்தரமற்ற (SemiPermanent) மேற்கூரை கொண்ட தனித்தனி கடைகளை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நகர் மன்றத்தால் தீர்மானம் எண்.240 நாள் 31.03.2015-ல் தீர்மானிக்கப்பட்டு அக்கடைகளுக்கு சதுரடி ஒன்றுக்கு ரூ.4/- ஆக வாடகை நிர்ணயம் செய்து, அப்பகுதியில் இருந்த 47 கடைகள் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டு மேலும் அப்பகுதியில் உள்ள நான்கு வெங்காய கடைகள் கண்டறியப்பட்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி கடை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது சந்தை கண்காணிப்பாளர் குறிப்பு நாள் 19.5.2021-ல் வெங்காய கடை பகுதியில் 30*30 அளவில் 900 சதுரடி பரப்பளவில் ஒரு நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட வெங்காய கடை சுங்க இனத்தில் உள்ளதை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர குறிப்பு வழங்கியுள்ளார்

| கடைஎண் | சதுரடி (Sஷ) | பொறுப்புத் தொகை ரூ | கூடுதல் பொறுப்புத் தொகை ரூ |
|---|---|---|---|
| 52 | 900 | 30,000/- | 1,25,000/- |

எனவே, நகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கில் நிரந்தரமற்ற மேற்கூரை

| | |
|---|---|
| | கொண்ட ஒரு வெங்காய கடைக்கு பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்திதாளில் விளம்பரம் செய்யவும், அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. சந்தை மதிப்பு சதுரடி ஒன்றுக்கு ரூ.5/- ஆக நிர்ணயம் செய்யலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2414/2021/அ6) |
| 2939) | நகராட்சிக்கு சொந்தமான மரப்பேட்டை வணிக வளாக கடை எண்,2 திரு,செல்வராஜ் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டு 30,06,2021 உடன் இரண்டாம் மூன்றாண்டு தொகுப்பு கால அளவு முடிவுடைகிறது, இந்நிலையில் குத்தகைதாரர் திரு.செல்வராஜ் என்பவர் காலமாகிவிட்டதால் அவரது வாரிசுதாரர்களால் கடை நடத்திட இயலாது எனவும் 01,07,2021 முதல் உரிமம் புதுப்பிக்க வேண்டாம் என தெரிவித்து கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக அவரது வாரிசுதாரர்களால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதன்படி இக்கடையின் குத்தகை உரிமத்தினை 01.07.2021 முதல் ரத்து செய்து பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1131/2020/அ6 |
| 2940) | நகராட்சிக்கு சொந்தமான பெருமாள் செட்டி வீதி கடை எண்.14 (வரிவிதிப்பு எண்.076/13021) திரு.முகமது இஸ்மாயில் என்பவரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டு வாடகை தொகை செலுத்தாததால் 31.03.2021ல் கடையானது பூட்டி நகராட்சி வசம் பொறுப்பேற்கப்பட்டதாக 03.05.2021-ல் சந்தை கண்காணிப்பாளரால் குறிப்பு வழங்கப்பட்டதன்படி இக்கடையின் குத்தகை உரிமத்தினை 01.06.2021ல் முதல் ரத்து செய்து கணினியில் கேட்பு நீக்கம் செய்திடவும், பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்திதாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1131/2020/அ6 |
| 2941) | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான காந்தி வாரச்சந்தை வளாகத்தில் கொட்டப்பட்டுள்ள மண்மேடுகள் மற்றும் கழிவுகளை அகற்றி அவ்விடத்தினைச் சுற்றிலும் கம்பி வேலி அமைத்தல் பணிக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு 29.06.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு. |

| | | |
|---|---|---|
| 1. | M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.41% குறைவு. |

| | | |
|---|---|---|
| 2. | திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.32% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.41% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.41% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2561/2021/இ1

2942) பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்திலுள்ள கட்டணக் கழிப்பிடத்தில் மராமத்து மேற்கொண்டு புதுப்பித்தல் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 29.06.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவு. |
| 2. | திரு.சி.ராமகிருஷ்ணன், கோட்டூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.72% அதிகம். |

sவரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.13% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2430/2021/இ1